நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 23/06/2023

## சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023**ம் வருடம் **ஜீன்** மாதம் 27 **ம்** தேதி **செவ்வாய் கிழமை காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற அவசரக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

திருநெவ்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர், சின்ன மயிலாறு மற்றும் பெரியமயிலாறு பகுதியில் ஏற்கனவே வனத்துறை மூலம் விளிம்பு நிலை மக்களான காணி பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குடிநீர் குழாய்கள் பழுதடைந்து குடிநீர் சீராக செல்லவில்லை எனவும், உடனடியாக அதனை சரி செய்ய அறிவுறுத்தப்பட்டது. மேலும் திருநெல்வேலி மாவட்ட பசுமைகுழு மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பாக ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் 03.04.2023 அன்று நடைபெற்ற போது, குடிநீர் குழாய் சீரமைத்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில், நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால், ரூ. 2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும் , பணி மேற்கொள்ள வேண்டியும். செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு (ந,க, எண் 969/2022/இ1)

**அலுவலக்குறிப்பு**

விளிம்பு நிலை காணி மக்களின் நலன் கருதியும், குடிநீர் அத்தியாவசிம் மற்றும் அவசியம் கருதியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின் படி மேற்கண்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதால், மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும், பணியின் அவசரம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஓப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 288 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டி, அரசாணை நிலை எண் 159 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 08.11.2022 ன் படி, ரூ.,29.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.. மேற்கண்ட திட்டத்தின் கீழ் பொதிகையடி தூய நீரேற்று நிலைய வளாகத்தில் புதியதாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது..மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளும் போது, பொதிகையடி நீரேற்று நிலையத்தில் ஏற்கனவே அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குடிநீர் உந்து குழாய் மற்றும் வால்வு அமைந்துள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் குடிநீர் பாதிப்படையாமல், மேற்கண்ட குடிநீர் குழாய்களை மாற்றம் செய்யும் பணி அவசியமாகிறது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தாயர் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு, செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் , பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண்.610/2022/இ1)

**அலுவலக்குறிப்பு**

அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் பாதிக்கப்படாமலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்பதாலும், மேலும், நகர் பகுதிக்கு வழங்கப்படும் குடிநீர் பாதிக்கப்படாமல் சீரான குடிநீர் வழங்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டும் , தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும், பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 289 / குடிநீர் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் கீழ், இந்நகராட்சி ஒருங்கிணைந்த சமையற்கூடத்தில் இருந்து உணவு தயாரித்து, நகராட்சி பள்ளிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ், நகர்பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகளுக்கு, , காலை சிற்றுண்டி, உணவு வழங்குபவரை தேர்ந்தெடுத்தல் ந.க.எண் 234/22/இ1 | திரு. ஷேக் அப்துல் காதர் ஒப்பந்தக்காரர், தென்காசி, | ரூ.11.90 /- மட்டும் |
| | | பொதிகை மகளிர் சுய உதவி குழு விக்கிரமசிங்கபுரம் | ரூ.12.00 /- மட்டும் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. ஷேக் அப்துல் காதர், தென்காசி . என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியைஎதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்.

**தீர்மான எண் : 290 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டி, அரசாணை நிலை எண் 159 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 08.11.2022 ன் படி, ரூ.,29.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இந்நகராட்சிக்கு சொந்தமான பொதிகையடி தூய நீரேற்று நிலைய வளாகத்திற்குள் புதியதாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளதால், மேற்கண்ட பகுதியில் உள்ள 74 மரங்களை வெட்டி அகற்றுவதற்கு மாவட்ட அட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின் படி பசுமைக்குழு (Green Commitee) கூட்டத்தில் கூட்டப்பொருளாக சேர்க்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும் மேற்கண்ட 74 மரங்களை அம்பாசமுத்திரம் வனசரகம் அலுவலகம் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு, மரங்களுக்கு வரிசை எண் இடப்பட்டுள்ளது.. படி பசுமைக்குழு (Green Commitee) கூட்டத்தில் மூலம் மரங்களை வெட்டி அகற்றுவதற்கு அனுமதி பெறப்பட்டவுடன், மரங்களை முறையாக ஏலம் விட்டு வெட்டி அகற்றுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண்.610/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு**

இத்திட்டம் மத்திய மாநில அரசின் . குடிநீர் திட்ட சிறப்பு பணி என்பதாலும், பணியினை விரைந்து செயல்படுத்தி பொது மக்கள் பயன்பாட்டிற்க கொண்டு வரைவேண்டும் என்பதனாலும், பொதிகையடி

வளாகத்திற்குள் புதிய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இடையூராக உள்ள 74 மரங்களை பசுமைக்குழு (Green Commitee) கூட்டத்தில் மூலம் மரங்களை வெட்டி அகற்றுவதற்கு அனுமதி பெறப்பட்டவுடன், மரங்களை முறையாக ஏலம் விட்டு வெட்டி அகற்றுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்,

**தீர்மான எண் : 291 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 5**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் காரையார் சின்ன மயிலார் மற்றும் பெரியமயிலாறு பகுதியில் , கீழ்க்கண்ட விவரப்படியான பணிகள் மேற்கொள்ள 09.06.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சின்னமயிலார் மற்றும் பெரியையமயிலார் பகுதியில் குடிநீர் குழாய் அமைத்தல்<br>மதிப்பீடு ரூ. 2.50 இலட்சம்<br>(ந,க, எண் 969/2022/இ1) | திரு. கே, இராஜா<br>ஒப்பந்தக்காரர், விக்கிரமசிங்கபுரம் | 0.01 % மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு, வெங்கட் பெருமாள் சுப்பையா<br>ஒப்பந்தக்காரர்<br>திருநெல்வேலி | 008 % மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா, விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியைஎதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்.

**தீர்மான எண் : 292 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறைக்கு, இந்நகராட்சி முதல் தளத்தில் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறையில் உள்ள ஏர்கண்டிஷனரை (AC) இடம் மாற்றம் செய்யவும், நகராட்சி புள்ளிவிவர -குறிப்பாளர் அறையில் உள்ள பழுதடைந்த ஏர்கண்டிஷனரை(AC) பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட பணிகளின் அவசியம் கருதி, பணியினை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 293 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக நகர்மன்றத் தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN76 AW3579 ல் பழுதான 4 டயர்களையும் மாற்றம் செய்து புதிய டயர்கள் பொருத்திக் கொடுக்கும் வகைக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| Sl.No | Item & Description | Qty | Vinayaga Auto Mobiles, Tuckerammalpuram | Durga Auto Mobiles, Tirunelveli | Success Auto Mobiles. Tirunelveli |
|---|---|---|---|---|---|
| 1 | BridgeStone Tyre 215/75R15 D689TK (With Wheel Alignment & Mouth ) for TN76 AW3579 | 4 nos | Rs.8000/- (Per Tyre+ mouth) | Rs.8100/- (Per Tyre+ Mouth) | Rs.8400/- (Per Tyre+Mouth) |

(ந,க, எண் 778/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கெடுத்துள்ள **விநாயாக ஆட்டோ மொபைல்ஸ்**, தக்கரம்மாள்புரம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 294 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி கிராமம் I அரசு புறம்போக்கு தீர்வை ஏற்படாத தரிசு புல எண் 406/1 விஸ்தீரணம் 2.38.00 ஹெக்டேர் நிலத்தில் 0.54.42 ஹெக்டேர் புதிய புல எண் 406/4 எனவும், 1.51.02 ஹெக்டேர் புதிய புல எண் 406/5 எனவும் உட்பிரிவு செய்து நத்தமாக நிலவகை மாற்றம் செய்து இலவச வீட்டுமனை பட்டா வழங்க ஆட்சேபணை ஏதும் இல்லை என மன்ற தீர்மானம் இயற்றி வழங்கிட கோரி வருவாய் வட்டாட்சியர், அம்பாசமுத்திரம் கடிதம் ந.க.எண்:ஆ1/2344/2023, நாள் 29.05.2023ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தரிசு புல எண் 406/1ல் 0.54.42 ஹெக்டேர் புதிய புல எண் 406/4 எனவும், 1.51.02 ஹெக்டேர் புதிய புல எண் 406/5 எனவும் உட்பிரிவு செய்து நத்தமாக நிலவகை மாற்றம் செய்து இலவச வீட்டுமனை பட்டா வழங்க ஆட்சேபணை ஏதுமில்லை என்று வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. ந.க.எண் 727/2023/எப்1

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 295 / மன்றத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை என்பதால், மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பாபநாசம் மெயின்ரோடு சர்வே எண் 970/1 ல் திருமதி. சுகுமாரி என்பவரால் இந்நகராட்சியின் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடத்தினை உடன் இடித்து அப்புறப்படுத்தகோரி இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண் 1366/2017/எப்1, நாள் 26.10.2019ல் தெரிவிக்கப்பட்டதனை எதிர்த்து திருமதி சுகுமாரி என்பவரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு W.P (MD) No 26182/2019 னை தள்ளுபடி செய்த வகைக்கு உண்டான வழக்கு கட்டணம் (Professional Fee) மற்றும் இதர கட்டணம் (Clerical Expenses) மாக (ரூ 11000 + 1000) ரூ 11,000/- ம் வழங்கிடகோரி வழக்கறிஞர் H. ஆறுமுகம் என்பவரின் கடிதம் HALA/VKP/B.No.6/2023, நாள் 30.05.2023 தேதி வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும். மேற்படி செலவினத்தை வருவாய்நிதியில் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கு (ந.க.எண் 1366/2017/எப்1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 296 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அகஸ்தியர்புரம் பகுதி சர்வே எண் 285/1A அமைந்தள்ள நிலத்தினை திருமதி. நாச்சியார் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக இடத்தின் உரிமையாளர் திரு.M.சண்முகநாதன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு W.P (MD) No 2118/2023 ல் 4வது பிரதிவாதியாக ஆணையாளர் சேர்க்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட வழக்கிற்கு வக்காளத்து செய்த வகைக்கு உண்டான வழக்கு கட்டணம் (Professional Fee) மற்றும் இதர கட்டணம் (Clerical Expenses) மாக (ரூ 11000 + 1000) ரூ 11,000/-ம் வழங்கிடகோரி வழக்கறிஞர் H. ஆறுமுகம் என்பவரின் கடிதம் HALA/VKP/B.No.3/2023, நாள் 30.05.2023 தேதி வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட வழக்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும். மேற்படி செலவினத்தை வருவாய்நிதியில் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கு (ந.க.எண் 162/22/எப்1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 297 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 11**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்:WP(MD) 16385/2020 மற்றும் WP(MD) 16385/2020 வழக்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையால் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. அதற்கான வழக்குகட்டணம் ரூ.22000/- வழங்ககோரி திரு.H.ஆறுமுகம், வழக்கறிஞர் கடிதம் வரப்பெற்றுள்ளதினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மேற்படி வழக்கு கட்டணம் ரூ.22000/- நகர்மன்ற வழக்கறிஞர் திரு.H.ஆறுமுகம், அவர்களுக்கு வழங்கலாம். மேற்படி செலவு தொகையினை வருவாய்நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனமதிக்கலாம். **(ந.க.எண்:6406/2019/சி1)**

**தீர்மான எண் : 298 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 12**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கு அதிகமாக அளவுள்ள திடக்கழிவுகள் உருவாக்க கூடிய கட்டிடங்களை பயன்படுத்தும் மத்திய அரசுச்துறைகள், தனியார் நிறுவனங்கள், மாநில அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்,மருத்துவமனைகள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள், பள்ளிகள்,கல்லூரிகள் இதர கல்வி நிறுவனங்கள், மாணவர்விடுதிகள்,வர்த்தக(ஷாப்பிங்) மால்கள்,வழிபாட்டு தலங்கள்,விளையாட்டு அரங்குகள்,விளையாட்டு வளாகங்கள்,துணிவிற்பனையகங்கள், உணவு விடுதிகள்,திருமணமண்டபங்கள் தங்கும் விடுதிகள்,வியாபார நிறுவனங்கள் மற்றும் சந்தை ஒப்பந்தம் எடுத்தோர் ஆகியோர் அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (BULK WASTE GENERATORS) என தகுதியுடையோர்களாவர்.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016- ன்படி நாள் ஒன்றிற்கு 100 கிலோவிற்கு மேல் கழிவுகள் உற்பத்தி விகிதத்தை கொண்டிருக்கின்ற அமைப்புகள் பின்வருமாறு.

| தலைப்பு | விளக்கம் |
|---|---|
| குடியிருப்பு | 300 க்கு மேற்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு வளாகம் மாநில/ மத்திய அரசு வீட்டு காலனிகள் குடியிருப்பு நலச்சங்கம் (RWAS) |
| வணிகம் | அனைத்து ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், வணிக வளாகங்கள்/மால்கள் |
| அரசுபொதுத்துறை அல்லது தனியார் அமைப்புகள் பொதுத்துறை | அலுவலகங்கள், தனியார்துறை அலுவலகங்கள் வளாகங்கள் மற்றும் கட்டிடங்கள் |
| சமூக உள்கட்டமைப்பு | 200க்கு மேற்பட்ட படுக்கைகள் கொண்ட தனியார் மருத்துவமனைக்குள் கேன்டீன்கள்/ ரெஸ்டாரண்டுகள் / வழிபாட்டு இடம் /அரங்கம்/விளையாட்டு வாகனங்கள்/கிளப்புகள்/திருமண மண்டபங்கள்/பொழுதுபோக்கு வளாகங்கள்/விடுதிகள்/கல்லூரிகள்/பல்கலைகழகங்கள்/ 500க்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்ட பயிற்சி நிறுவனங்கள்/ இரயில் நிலையம்/ பேருந்து நிலையம்/விமான நிலையம் போன்றவை |

எனவே மேற்குறிப்பிட்ட குடியிருப்புகள்,வணிக பகுதிகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் 100 கிலோவிற்கு அதிகமாக கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று பதிவு செய்து தங்கள் வளாகத்திற்குள் உருவாகும் கழிவுகளை மறு சுழற்சி செய்வதற்கு ஏற்ப உள் கட்டமைப்பு

வசதிகளை ஏற்படுத்தி கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் மொத்த கழிவு உருவாகும் (BULK WASTE GENERATORS) தங்கள் மீது திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என தினத்தந்தி நாளிதழில் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளமைக்காக பட்டியல் தொகை ரூ.9450/-னை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் .

**அலுவலககுறிப்பு:**

1. அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 299 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 13**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 14494/2023/எம்எ1 நாள் 14.06.2023 ன் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் பொதுநிதி 2023-24 ன் கீழ் ரூ.46.00 இலட்சம் ம்திப்பீடில், கீழ்க்கண்ட விவரப்படியான பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் படி, பணிகளின் அவசியம் கருதி பொது நிதியில் இருந்து பணியினை மேற்கொள்ள, அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் படி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி 2023-24 ல் இருந்து செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 11 சிவஞானபுரம் பகுதி சிதிலமடைந்த பாலம் சீரமைத்தல் | ரூ.16.00 |
| 2 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 12 பொதிகையடி வடக்குத் தெரு பகுதி கோடைமேலழகியான் கால்வாயில் படித்துறை அமைத்தல் | ரூ.10.00 |
| 3 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 20 மீனாட்சிபுரம்வாய்கால் அருகில் கோடைமேலழகியான் கால்வாயில் படித்துறை அமைத்தல் | ரூ.10.00 |
| 4 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 15 எஸ்ஆர்வி நகர் சாலையில் கோடைமேலழகியான் கால்வாயில் தடுப்பு சுவர் அமைத்தல் | ரூ.10.00 |

ந.க.எண் 478/23/இ1

**அலுவலககுறிப்பு:**

சென்னைநகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் செலவினம் செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 300 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 14**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையின் படியும், திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் நேரடி அறிவுரையின் படியும், இந்நகர் பகுதியில் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரினை மாதம் ஒரு முறை பகுப்பாய்வு செய்து, வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை உறுதி செய்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீரினை , தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி மூலம் பகுப்பாய்வு செய்திடவும், அதற்கான செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.3304/- வீதம் 12 மாதங்களுக்கு ரூ.39648/- மட்டும்

இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவினம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 460/23/இ1)

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 301 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 15**

அம்பாசமுத்திரம் வட்டாரக்கல்வி அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண் 121/அ3/2022 நாள் 05.06.2023 ல், திருநெல்வேலி மாவட்ட அட்சியர் அவர்களின் 30.05.2023 ம் தேதிய ஆய்வு அறிவுரையின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கீழ்க்கண்ட விவரப்படியாக பள்ளி கட்டிடங்களில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து தர கேட்டுக்கொண்டுள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | பள்ளியின் பெயர் | பழுது விவரம் |
|---|---|---|
| 1 | பாபநாசம் கீழணை நடுநிலைப்பள்ளி | மேற்கூரை கட்டிடம், வெளிப்புறம் சுவர் சரி செய்யப்பட வேண்டும் |
| 2 | சேர்வலார் தொடக்கப்பள்ளி | மேற்கூரை பழுது மற்றும் வலைக்கதவு பழுது சரி செய்யப்பட வேண்டும் |
| 3 | பாபநாசம் மேலணை தொடக்கப்பள்ளி | கழிவறை கதவு, மேற்கூரை, சமயலறை, மற்றும் வலைக்கதவு பழது சரி செய்யப்பட வேண்டும், கூடுதல் வகுப்பறை அமைத்தல் |
| 4 | அனவன்குடியிருப்பு தொடக்கப்பள்ளி | பள்ளியின் முன் இருக்கும் வேப்பமரத்தினை அகற்ற வேண்டும் |
| 5 | அய்யனார்குளம், தொடக்கப்பள்ளி | பழைய சமையலறை கூடத்தினை இடிக்கப்பட வேண்டும். |

மேற்கண்ட வரிசை எண் 2 மற்றும் 3 ல் உள்ள பள்ளிகட்டிடங்கள், வனத்துறைக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருவதாலும், வனப்பகுதியில் அமைந்துள்ளதலும்,, வனத்துறையின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பள்ளி கட்டிடங்களின் பழுதுகளை இந்நகராட்சி பொறியாளர் மூலம் ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து, பணிகள் மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 751/23/இ1)

**அலுவலககுறிப்பு:**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் ந7/35599/2022 நாள் 24.04.2023 ன் படி, இந்நகராட்சி பகுதியில் உள்ள ஊராட்சி ஓன்றிய பள்ளிகள் அனைத்தையும் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட பழுது பராமரிப்பு பணிகளை நகராட்சி மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், பழுது பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம், மேலும் மேற்கண்ட வரிசை எண் 2 மற்றும் 3 உள்ள பள்ளிகட்டிடங்கள் வனத்துறைக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருவதால், முறையே வனத்துறையின் அனுமதி பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,

**தீர்மான எண் : 302 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 16**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் 138/மாதிகு/2022 நாள் 06.05.2023 ன் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி காரையார் சின்ன மயிலார் பகுதியில் வாழும் காணி மக்கள், குடியிருப்புகளுக்கு செல்ல தாமிரபரணி ஆற்றை கடந்து செல்ல வேண்டியுள்ளதால், நதியின் குறுகே புதியதாக Hanging Rope Bridge அமைத்தல் வேண்டி சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23 ன் கீழ் ரூ. 30.00 இலட்சம் நிதி ஓதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி பணி மேற்கொள்ள

உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டு, நகராட்சி பொறியாளர் மூலம் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்கண்ட பாலம் அமையப்பெறவுள்ள இடமானது காரையார் அணையிள் அருகாமையில், தாமிரபரணி ஆற்றங்கறையில் குறுக்கே உள்ளதால், Hanging Rope Bridge அமைக்கும் போது, மழை மற்றும் புயல் நேரங்களில், இயற்கை சீற்றத்தின் காரணமாக பாலம் சிதிலமடைந்துவிடுவதோடு, பாதுகாப்பு அற்றதாக இருக்கும் என தொழில்நுட்ப ரீதியாக அறிவுரை பெறப்பட்டுள்ளதால், மேற்கண்ட பணி மேற்கொள்ள முறையே தனியார் ஆலோசகர் மூலம் உரிய விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் திட்டக்கருத்துரு தயார் செய்து பிரேரானை சமர்ப்பிக்கவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண 2084/2021/இ1)

**அலுவலககுறிப்பு:**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணி என்பதாலும், காணி மக்களின் நலன் கருதியும் ., நகராட்சி பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப ரீதியான ஆலோசனையின் படியும், சின்னமயிலார் பகுதியில் புதியதாக பாலம் கட்டும் பொருட்டு தனியார் ஆலோசகர் நியமனம் செய்து, விரிவாக திட்டக்கருத்துரு மற்றும் மதிப்பீடு தயார் செய்யும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 303 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.17**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்பெற்ற வாகனங்களுக்கும்,ஆட்டோக்களுக்கும் தகுதிசான்று பெறுவதற்கும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் பொதுநிதியில் இருந்து செலவுகள் செய்வதற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்:81 ,நாள்: 29.06.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் TN76AX 1663 க்கு பழுதுபார்ப்பு பணிகள் செய்வதற்கும் அவசரஅவசியம் கருதி குறுகியகால விலைப்புள்ளி கேராப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆர்.வி.ஆர் மோட்டார் ஒர்க்ஸ் | ரூ.102483.00 |
| 2 | நம்பி மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | ரூ.105250.00 |
| 3 | பிரபா மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | ரூ.108550.00 |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள ஆர்.வி.ஆர் மோட்டார் ஒர்க்ஸ் அம்பாசமுத்திரம் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம் அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 304 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.18**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்லையில் பாதாள சாக்கடை வசதி இல்லாததால், கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்யவும், அப்புறப்படுத்தவும் கழிவு நீர் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன, இது தொடர்பாக கழிவு சுத்தம் செய்ய மற்றும் அப்புறப்படுத்த பயன்படுத்தப்படும் கழிவு நீர் வாகனங்கள் முறையாக பதிவு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்யப்படாத வாகனங்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்பது குறித்து நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு

வரப்பெற்ற  தினமலர் நாளிதழ் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.6048/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு( ந..க.எண் 1919/2022/எச்1)

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் :  305   / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**ஒம்/- திரு.மா. செல்வசுரேஷ்பெருமாள்**

**நகர்மன்றத் தலைவர்**

**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி**

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/